பக்கங்கள் 20+6

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 12 புதன்கிழமை 28.08.2024 | அதிர்வு 27

## ரணில் தேர்தலில் போட்டியிட தடை கோரும் மனு நிராகரிப்பு



பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்கத் தவறியமை மற்றும் உயர்நீதிமன்றத்துக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கும் நீதியரசர்களை நியமிக்காமை 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ரணிலை நாங்கள் ஆதரிக்கமாட்டோம்

## ஜே.வி.பியினர் தமிழர்களின் அடித்தளத்தை உடைத்தவர்கள் என்றும் செல்வம் தெரிவிப்பு

(கே.வசந்தன்)

“தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஒருபோதும் ரணிலை ஆதரிக்காது. அத்துடன் ஜே.வி.பியினர் தமிழர்களின் அடித்தளத்தையே உடைத்து வடக்கு, கிழக்கைப் பிரித்தவர்கள். அவர்களுக்கும் தமிழர்கள் வாக்களிக்கமாட்டார்கள்.” 04



# கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளதா?



## தெளிவுபடுத்தி சுமந்திரன் அறிக்கை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி) நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது என மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தி நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் இன்று அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி) நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது எனப் பெரியளவிலான 04





# கோட்டாவின் நிழலில் வளர்ந்த கூட்டத்தை பாதுகாக்கும் ரணிலைத் தோற்கடிப்போம்!

## முஸ்லிம்கள் ஒன்றுபட வேண்டுமென ரிஷாட் பதியுதீன் எம்.பி. தெரிவிப்பு

கோட்டாவின் நிழலில் வளர்ந்த கூட்டத்தை பாதுகாக்கும் ரணிலைத் தோற்கடிப்பதற்கு, முஸ்லிம்கள் ஒன்றுபட வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

சம்மாந்துறையில் திங்கட்கிழமை (26) நடந்த கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைத் தென்னிலங்கை உன்னிப்பாக அவதானிக்கிறது. அரசியலை குடும்பச் சொத்தாக்கி, நாட்டின் பொருளாதாரத்தை கபளீகரம் செய்த கும்பலைத் தோற்கடிக்க பெரும்பான்மை மக்கள் என்றோ தயாராகிவிட்டனர்.

எனவே, சிறுபான்மைச் சமூகங்களும் இவ்விடயத்தில் ஒன்றுபட வேண்டும். பேரினவாதிகளின் முகவர்களாக, இங்குள்ள ஒரு சிலர் களமிறக்கப்பட்டுள்ளமை கவலையளிக்கிறது. கிழக்கு மக்கள் ஒன்றுபட்டுவிட்டதாக ஒரு மாயையைக் காட்டி, தென்னிலங்கையை மட்டுமல்ல முழு நாட்டையும் இவர்கள் மீண்டும் ஏமாற்றத் துடிக்கின்றனர்.

பணத்தை வாரியிறைத்து, பஸ்களில் மக்களை கூட்டி வந்து, இவர்கள் காட்டும் மாய வித்தைகள் பலனளிக்காது. ஒருவருக்கு ஐயாயிரம் ரூபா வழங்கப்படுகிறதென்றால், எவ்வளவு பணத்தை இவர்கள் கொள்ளையடித்துள்ளனர் என்பதை கணக்கிட்டுப்பாருங்கள்.

முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டபோது, முஸ்லிம்களின் ஆத்மாக்கள் அலறித்துடித்தன. மத உணர்வுகள் பறிக்கப்படுவதாகவும் ஈமான் இழக்கப்படுவதாகவும் வேதனையடைந்தோம். ஆனால், அமைச்சர் அலிசப்ரி எதையும் கண்டுகொள்ளாமல் கொடுங்கோலன் கோட்டாவுடன் கூட்டுச்சேர்ந்தார். இவர்தான், இன்று கிழக்கு மாகாணத்துக்கு வந்து, ரணிலுக்கு வாக்களிக்கக் கோருகிறார்.

கோட்டாவின் எஞ்சியகால ஆட்சியில் சுகம் அனுபவிக்கும் ரணிலுக்கு வழங்கப்படும் வாக்குகள், இஸ்லாமிய இறை நம்பிக்கைக்கு எதிரானவை. இதைப் புரிந்துகொள்ளுங்கள். அமைச்சர் அலிசப்ரிக்கும் இதைப் புரியவையுங்கள்.





இனவாதம் மற்றும் மதவாதத்தை தூக்கிப்பிடித்தாடிய சில பௌத்த துறவிகளுக்கு பாதுகாப்பு வழங்கிய ஆட்சியையும், அதே அமைச்சரவையையும் மன்னிக்கவே முடியாது.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு இவர்களது இனவாத மற்றும் மதவாத திமிர்த்தனங்களே காரணமாகின. வெறுப்பூட்டும் பேச்சுக்களால் சமூகங்களை மோத விட்டவர்களைப் பாதுகாத்த ஆட்சியையும் அமைச்சரவையையும் விரட்டியடிக்கத் தயாராகுங்கள். சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் இவை எதுவும் நடக்காது. இவ்வாறு பேசுவோரைத் தண்டிக்க விசேட ஆணைக்குழுவை நியமிக்குமாறு நாம் கோரியுள்ளோம்.

எனவே, எங்களது நிலைப்பாட்டைப் பலப்படுத்தவும் ஏஜெண்டுகளைத் தோற்கடிக்கவும் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களியுங்கள்.-என்றார்.


குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998


# காப்பாற்றப்பட்ட இரண்டு இந்திய மீனவர்களும் நாளை விமானம் மூலம் தாய்நாட்டுக்குப் பயணம்

## காணாமல்போன மற்றைய இரண்டு மீனவர்களையும் தேடும் பணி தொடர்கின்றது

(ந.லோகதயாளன்)

கடலில் மூழ்கிய மீன்பிடிப் படகில் இருந்து காப்பாற்றப்பட்ட இரண்டு இந்திய மீனவர்களும் நாளை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக இந்தியா பயணிக்கவுள்ளனர்.

தமிழகத்தின் இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கப் புறப்பட்ட ரோலர் விசைப்படகில் நான்கு மீனவர்கள் பயணித்தபோது இந்திய எல்லைக்குள் கச்சதீவுக்கு அண்மையாக நேற்று முன்தினம் விசைப்படகு உடைந்து கடலில் மூழ்கியது.

அந்தப் படகில் இருந்த நான்கு மீனவர்களில் இரண்டு மீனவர்கள் கச்சதீவை அடைந்தபோது இருவரும் இலங்கைக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு யாழ். நெடுந்தீவுக்கு அழைத்து வரப்பட்ட நிலையில் இன்று யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.



இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்ட இரண்டு தமிழக மீனவர்களுக்கும் தற்காலிக பயண அனுமதி அட்டை தயார் செய்யப்பட்டு அதன் ஊடாக நாளை தமிழகத்தின் சென்னைக்கு அவர்களை அனுப்பும் நடவடிக்கையை யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் மேற்கொண்டுள்ளது.

இதேநேரம் படகு மூழ்கிய வேளை காணாமல்போன மற்றைய இரண்டு இந்திய மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினரும் இந்திய விமானப் படையினரும் தொடர்ந்து தேடி வருகின்றனர்.




# யானையின் தாக்குதலுக்கு இலக்காகி மாணவன் வைத்தியசாலையில் சேர்ப்பு

மூதூர் – ஸ்ரீநாராயணபுரம் பகுதியில் பாடசாலை மாணவன் ஒருவர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

கிளிவெட்டி மகா வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் கல்வி கற்கும் 16 வயதுடைய மாணவனே யானையின் தாக்குதலுக்கு இலக்காகி மூதூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீநாராயணபுரம் பகுதியைச் சேர்ந்த மேற்படி மாணவன் கிளிவெட்டி மகா வித்தியாலயத்துக்குப் பிரத்தியேக வகுப்புக்காகச் சைக்கிளில் சென்றபோது ஸ்ரீ நாராயணர் ஆலயத்துக்கு முன்னால் வைத்து யானை தாக்கியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை இரவு முதல் காட்டு யானைகளின் நடமாட்டம் அப்பகுதியில் காணப்பட்டது என்றும், நீண்ட காலமாக மூதூர் பகுதியில் காட்டு யானைகளால் தொடர்ச்சியான பல தாக்குதல் சம்பவங்களும் உயிரிழப்புச் சம்பவங்களும் பதிவாகி வருகின்றன என்றும், பயிர்களையும் யானைகள் சேதம் செய்து வருகின்றன என்றும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# வடமராட்சியில் விபத்தில் சிக்கியவர் சிகிச்சை பலனின்றி பரிதாப மரணம்

யாழ்ப்பாணம், வடமராட்சியில் விபத்தில் படுகாயமடைந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி, புலோலி பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

புலோலி பகுதியில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற வான் – சைக்கிள் விபத்தில் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார



வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

# நாகர்கோவிலில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த இளைஞர் மரணம்!

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த இளம் கடற்றொழிலாளி திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் கடற்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த வேளை திடீர் சுகவீனம் ஏற்பட்ட நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ரணில் தேர்தலில்...

என்பவற்றின் அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர் என அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது உயர்நீதிமன்றம் இன்று நிராகரித்துள்ளது.

நீதிமன்றக் கட்டணமாக 50 ஆயிரம் ரூபா செலுத்துமாறும் மனுதாரருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் நீதிமன்றத்துக்குப் பொய்யாகத் தகவல்களை சமர்ப்பித்துள்ளனர் எனவும், அந்த மனு அரசமைப்பின் 92 ஆவது சரத்தை மீறுவதாக இருக்கின்றது எனவும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே இதன்போது ஆட்சேபனை தெரிவித்தார்.

## ரணிலை நாங்கள்...

– இவ்வாறு ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனைஆதரித்துதுண்டுப்பிரசுரம்வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ்ப் பொது வேட்பாளருக்கு உரிய ஆதரவுத் தளம் அதிகரித்து வருகின்றது. எமது மக்கள் எமது இலட்சியப் பாதையிலே தமிழ்ப் பொது வேட்பாளருக்குக் கட்டாயம் வாக்களிப்பார்கள் எனக் கருதுகின்றேன்.

எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் தொடர்பாக எதிராகக் கூறும் கருத்துக்கள் அது அவருடைய தனிப்பட்ட கருத்தாகும்.

எங்களுடைய கட்சி ஒரு ஜனநாயக ரீதியான கட்சியாகும். ஆகவே, அது அவருடைய தனிப்பட்ட கருத்தாகும். எமது கட்சியைப் பொறுத்தவரை ஒரு முடிவை எடுத்துள்ளது.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பில் பேச்சுவார்த்தைக்குச் செல்வது தொடர்பாக ஒரு குறிப்பிட்ட நேரம் வரையே கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

குறிப்பாக தனித்தனியாகச் செல்வதை விடுத்து சேர்ந்து செல்வது. அத்துடன் அவர்களுடைய கடிதத்தில் என்னென்ன வலியுறுத்தப்பட்டுள்ளனவோஅதன் பிரகாரம் ஒரு முடிவை எடுத்துச் செல்வது என்பது தொடர்பாகவும் நாங்கள் ஒரு தீர்மானம் எடுத்துள்ளோம்.

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமாரவின் தேர்தல் விஞ்ஞானத்திலே பாதுகாப்புப் படை தொடர்பாகவும் குறிப்பாக மனித உரிமை மீறல்களைச் செய்தவர்களைக் காப்பாற்றுவது தொடர்பாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள்தான் வடக்கு, கிழக்கைப் பிரித்தவர்கள். என்னைப் பொருத்தவரை எங்கள் மக்கள் அநுரவைப் பற்றி சிந்திக்கவில்லை என்பதுதான் உண்மை.

அநுர தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனது கருத்துக்களைத் தெரிவித்தாலும் கூட எங்களது அடித்தளத்தை உடைத்து எறிந்தவர்கள் ஜே.வி.பியினரே.

இணைந்த வடக்கு, கிழக்குக்காக எங்களுடைய போராளிகள், இயக்கங்கள் எல்லோரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்கள். அதனை உடைத்த பெருமை ஜே.வி.பினருக்கு இருக்கின்றது.

அவர்கள் என்னதான் தேனும், பாலும் ஓடுமென்று கூறினாலும் கூட அவர்களுக்குத் தமிழர் பகுதிகளில் வாக்குப் போடுவது என்பது கடினமாகத்தான் இருக்கும்.

தமிழ் மக்களும் தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகளும் ஓர் அணியில் திரளவேண்டும் என்பதுதான் பிரதான நோக்கமாக இருக்கின்றது.

பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டிருக்கின்ற நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் எமது தமிழ்ச் சமூகம் ஒரு குடையின் கீழ் அணி திரண்டு இருக்கின்றது. இதனைச் செய்தியாக்க வேண்டும் என்பதுதான் நமது ‘சங்கு’ சின்னத்தின் நோக்கமாக இருக்கின்றது.

எமது மனங்களிலே நீறுபூத்த நெருப்பாக எமது விடுதலை வேட்கை இருக்கின்றது. இந்நிலையில் நமது சங்கு சின்னத்தின் ஊடாக தென்னிலங்கைக்கும் சர்வதேசத்துக்கும் நாங்கள் எல்லோரும் ஒன்றாக நிற்கின்றோம் என்ற செய்தியைச் சொல்ல வேண்டும் என்பதே பிரதான நோக்கமாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஒரு முடிவெடுத்தால் அதிலிருந்து பின்வாங்காது. ஜனாதிபதி ரணிலை நாங்கள் மூவரும் சந்தித்தது தொடர்பாக நாங்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் சூழல் ஏற்படுமா என்று பல பேர் எம் மீது சேறு பூசும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

தமிழீழ விடுதலை இயக்கத்தினர் மக்களுடைய சிந்தனையின் அடிப்படையில் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என எண்ணுபவர்கள். எந்த நிலையிலும் தென் இலங்கை வேட்பாளர்களுக்கு விரல் நீட்டுகின்ற நிலை ஏற்படாது.” – என்றார்.

## கூட்டமைப்பு...

பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிதியானது குறிப்பிடப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டது போன்ற தோற்றப்பாடு வேண்டுமென்றே ஏற்படுத்தப்படுகின்றது.


பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிதி மற்றும் பல்வேறு அபிவிருத்தி நிதிகள் ஜனாதிபதி செயலகத்தால் இந்த வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

இதற்கு உதவியாக அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் அபிவிருத்திக்காக முன்மொழிவுகள் கோரப்பட்டிருந்தன.

இந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் வெவ்வேறு தொகைகள் ஜனாதிபதி செயலகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பணங்கள் மேற்சொன்ன அபிவிருத்திப் பணிகளுக்காக நேரடியாக மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்படுகின்றதே தவிர எந்த நாடாளுமன்ற உறுப்பிருக்கும் நேரடியாகக் கொடுக்கப்படவில்லை.

அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்படுகின்ற தவறான விஷமப் பிரச்சாரங்கள் காரணமாக இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது.” – என்றுள்ளது.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வாய்ப்பந்தல் வாக்குறுதிகள்

‘வாய்ப்பந்தலில் வங்காளம் பயணிப்பது’ என்பார்கள். வெறும் வாய்ச்சவடாலில் காரியம் சாதிப்பவர் போல வெட்டிப் பிடுங்குபவர்களை அப்படித்தான் கூறுவர்.

இப்போது ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிப் பிரதான வேட்பாளர்கள் வழங்கும் வாக்குறுதிகளும் இத்தகைய வாய்ச்சவடால் முழக்கங்களாகத்தான் தெரிகின்றன. கற்பனையில் கதை கட்டி விடுவது போல உறுதிமொழிகளை அள்ளி வீசி வருகிறார்கள்.

ஏதோ பொருளாதார வளமும், சுபிட்சமும் நிறைந்த நாட்டில் மக்களுக்கு வசதி, வாய்ப்புகள், சம்பள உயர்வுகள், வெகுமதிகள், வரிவிலக்குகள், விலைக் குறைப்புகளை வாரி வழங்கப் போகின்றவர்களாக தினசரி அவர்கள் தரும் அறிவிப்புக்கள் வியக்க வைக்கின்றன.

ஏற்கனவே நாடு பெரும் வங்குறோத்து நிலையில்தான் உள்ளது. அதில் இருந்து இன்னும் மீளவில்லை. நிறுத்தப்பட்ட கடன் மீளளிப்பு இன்னும் மீண்டும் தொடங்கப்படவில்லை. ஏதோ அன்றாடம் காய்ச்சி மாதிரி மூச்சு விடும் நிலைமை. வரிசை யுகம் இல்லையே தவிர, நாட்டின் பொருளாதாரம் இன்னும் வழமைக்கு மீண்டு விடவே இல்லை. அதற்குள் வாரி வழங்கும் திட்டங்களை வேட்பாளர்கள் அறிவிப்பது வேடிக்கையானது. மறுபுறத்தில் மக்களை முட்டாள்களாக்கும் நடவடிக்கையும் கூட.

நாட்டின் வருமானத்தை உயர்த்துவதற்கான வழிவகைகள்தான் இப்போது முக்கியமானவை. ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். உற்பத்தியைக் கூட்ட வேண்டும். விவசாயத்தைப் பெருக்க வேண்டும்.கைத்தொழில்களை மேம்படுத்த வேண்டும். இதை விடுத்து, வருமானத்தை பெருக்குவதற்கான வழிவகைகளைக் கூறாமல் - விவரிக்கா மல் - மக்களுக்கு சகாயங்களை வாரி இறைப்பதாக அறிவிப்பது நாட்டை மீண்டும் மீள முடியாத பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளும் அற்பத்தனமான - அறிவற்ற - முட்டாள்தனமான - முயற்சி தான்.

‘‘வரவுக்கும் செலவுக்கும் இடையிலான இணைப்புத் துண்டு விழுந்து அறுந்து விட்டது. இரண்டையும் தற்காலிக தொங்கு பாலத்தினால் இழுத்துக் கட்டி அதில் பயணம் செய்கிறோம். நிரந்தரமான- உறுதியான- பாலம் நிர்மாணித்து முடிக்கும் வரை இந்தத் தொங்கு பாலத்தில்தான் லாவகமாக, சாமர்த்தியமாக, அது விழுந்து விடாமல் பார்த்துக் கொண்டு, பயணிக்க வேண் டும்’’ - என்று கடும் பொருளாதார நெருக் கடிக்குள் கடந்த இரண்டு ஆண்டு காலமாக நாட்டை வழிநடத்திச் செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக் காட்டி இருந்தார்.

ஆனால் பிரதான வேட்பாளர்கள் - அதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட - நாட்டின் வருமானத்தை பெருக்குவதற்கான தந்திரோபாய மார்க்கங்களை முன்வைக்காமல், சகாயங்களைப் பற்றி கயிறு விடுவது நாட்டைக் கந்தறுக்கும் வேலைதான்.

குதிரை வண்டிலுக்கு முன்னால் கரட்டை கட்டுவது போல, அனைத்து அரச ஊழியர்களுக்கும் அடுத்த ஜனவரி தொடக்கம் 24 முதல் 35 வீத சம்பள உயர்வு மற்றும் வாழ்க்கை செலவுப் படியாக 25 ஆயிரம் ரூபா என்று அறிவிக்கிறார் ஜனாதிபதி.

சஜித் பிரேமதாஸவோ மகளிருக்கு இருபதாயிரம் ரூபாய் நன்கொடை புதிதாக வழங்கப்படும் என்கிறார். 25 ஆயிரம் ரூபா சம்பளம் உயர்வு என்கிறார் நாமல் ராஜபக்ஷ.

அநுரகுமார திஸநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனமும் வெறும் வாய்ப்பந்தல்தான். அதில் உள்ளவற்றை நிறைவேற்றுவதாயின் வருடாந்தம் 200 பில்லியன் ரூபா வருமான இழப்பு அரசுக்கு ஏற்படும் என்றும், அதை மீளப் பெற்றுக் கொள்வது எப்படி என்று குறிப்பிடப்படவில்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக் காட்டி உள்ளார்.

அநுரவின் தேர்தல் விஞ்ஞாபனப்படியான பொருளாதார கொள்கைகளை நடைமுறைப்படுத்தினால் இப்போது இலங்கைக்கு உதவ வந்திருக்கும் சர்வதேச நாணய நிதியம் மூடை முடிச்சுகளை கட்டிக்கொண்டு புறப்பட்டு விடும் என உண்மையைப் போட்டு உடைத்துள்ளார் பொருளாதார விற்பனரான கலாநிதி ஹர்ஷா டி சில்வா எம்.பி. மொத்தத்தில் வாய்ப்பந்தல் வாக் குறுதிகள்தான் இவை.

# மக்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது பெறுமதி வாய்ந்தோரையே ஆதரிக்க வேண்டும்!

## ஐக்கிய தேசிய கட்சியின் மாவட்ட மகளிர் அமைப்பாளர் சசிகலா ஜெயதேவா தெரிவிப்பு

(பழுவூரான்)



மக்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது பெறுமதி வாய்ந்தோரையே ஆதரிக்க வேண்டும். எமது நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த போது ரணிலைத் தவிர எந்த ஒரு தலைவரும் முன்வரவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அமைப்பாளர் சசிகலா ஜெயதேவா தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று செவ்வாய்க்கிழமை (26) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதித் தேர்தலின் போது மக்கள் தலைவர்களைத் தேர்ந் தெடுக்கும் போது கடவுளும் மக்களும் நேசிக்கும் பெறுமதி வாய்ந்த தலைவர்களை ஆதரிக்க வேண்டும்.

எமது நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த போது எந்த ஒரு தலைவரும் முன்வந்து நாட்டை பொறுப்பேற்காத நிலையிலே கடவுளின் ஆசீர்வாதத்துடன் ரணில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு நாட்டை வழமை நிலைக்குக் கொண்டு வந்தார்.

இந்த நிலையில் நாட்டின் தலைமைத்துவத்தை துணிச்சலாக முன்னெடுத்து அத்தியாவசிய பொருள்களுக்காக மக்கள் வரிசையில் நின்று மரணித்த நிலையைப் போக்கியவர் ரணில். நாம் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை முன்னெடுத்து வருவதற்கு காரண கர்த்தாவானார்.

இது தொடர வேண்டுமானால் இனி வரும் காலங்களில் மக்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது பெறுமதி வாய்ந்த தலைவர்களை ஜனாதிபதி தேர்தலின் போது தேர்ந்தெடுக்க வேண்டும். –என்றார்.



# ஜனாதிபதியாக யார் வந்தாலும் எமக்கு எந்தப் பலனும் இல்லை!

**நாங்கள் யாருக்கும் ஆதரவு இல்லை என்கிறார் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா**

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

ஜனாதிபதியாக யார் வந்தாலும் எமக்கு எந்தப் பலனும் இல்லை. நாங்கள் யாருக்கும் ஆதரவும் இல்லை என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்றுச் செவ்வாய்க் கிழமை (27) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக வீதியில் இருந்து போராடி வருகின்றோம். எனினும் எங்களுக்கு இதுவரை எவ்வித பதிலும் கிடைக்க வில்லை. இலங்கை அரசிடம் இருந்தும் சரி சர்வதேச அரசிடம் இருந்தும் சரி எவ்வித சமிஞ்ஞைகளும் கிடைக்க வில்லை.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களையும் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் தொடர்ந்தும் ஒற்றுமையாக சர்வதேசத்திடம் குரல் எழுப்பி வருகிறோம்.

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்பில் நீதிக்காக நாங்கள் கடந்த 15 வருடங்களாக வீதியில் இறங்கிப் போராடி வருகின்ற நிலையில் இதுவரை எந்த ஜனாதிபதியும் எங்களுக்குத் தீர்வை பெற்றுத் தரவில்லை.

எனவே இந்த முறை இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் எவர் ஜனாதிபதியாக வந்தாலும் எமக்கு எந்தவித



பலனும் இல்லை.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை (30) வடக்கு, கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இணைந்து இரு மாவட்டங்களில் போராட்டங்களை முன்னெடுக்க உள்ளோம்.

வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களும் இணைந்து யாழ். மாவட்டத்திலும், கிழக்கு மாகாணத்தில் உள்ள 3 மாவட்டங்களும் இணைந்து திருகோணமலை மாவட்டத்திலும் போராட்டங்களை முன் னெடுக்க உள்ளோம். இதற்கு வடக்கு கிழக்கில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை ஆரியகுள சந்தியில் இருந்து முனியப்பர் கோவில் வளாகம் வரை எமது போராட்டம் மற்றும் ஊர்வலம் இடம் பெறும்.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு எமது உறவுகளை மீட்க குரல் கொடுப்போம். காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி கிடைக்க அனைவரும் அணி திரள வேண்டும். அனைவரும் ஒத்துழைத்தால் மாத்திரமே தீர்வு கிடைக்கும். வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் உள்ள இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது மக்கள், அரசியல் பிரதி நிதிகள் , சமூக மட்ட அமைப்புக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆதரவு வழங்க வேண்டும்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எவர் ஜனாதிபதியாக வந்தாலும் எங்களுக்கு எந்தப் பலனும் இல்லை. நாங்கள் எவரையும் ஜனாதிபதியாக ஆதரிக்கவில்லை. எப்படியாக இருந்தாலும் ஜனாதிபதியாக சிங்கள ஆட்சியாளர்கள் வரப் போகின்றனர். அவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் என நாங்கள் நம்பவில்லை.

இதனாலேயே நாங்கள் சர்வதேசத்தை நம்பி நிற்கின்றோம்.

யார் ஜனாதிபதியாக வந்தாலும் எமக்கு கவலை இல்லை.எவரையும் நாங்கள் ஜனாதிபதியாக ஆதரிக்க வில்லை. எவராலும் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு எந்த பலனும் இல்லை. காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்காக முன்னெடுக்கும் போராட்டங்களில் ஒரு சில அரசியல் பிரதிநிதிகள் எமக்கு ஆதரவு தெரிவித்தனர். ஏனையோர் எவ்வித ஆதரவும் வழங்கவில்லை. எவர் ஜனாதிபதியாக வந்தாலும் பரவாயில்லை.வருகின்றவர்கள் எமக்கு நீதியை பெற்றுத் தருவார்கள் என்றால் நாங்கள் அவர்களுடன் கதைக்க முடியும்.- என்றார்.

# நல்லூர் தீர்த்த உற்சவ தினத்தில் யாழ். மாவட்டத்துக்கு விடுமுறை!

**வழங்குமாறு அமைச்சர் டக்ளஸ் ஆளுநரிடம் கோரிக்கை**

நல்லூர் தீர்த்த உற்சவ தினத்தில் யாழ். மாவட்டத்துக்கு விடுமுறை வழங்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கு மாகாண ஆளுநர் பி . எஸ் . எம் . சாள்ஸிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை வாழ் மக்கள் மட்டுமல்ல உலக வாழ் இந்துக்களும் நல்லூர் திருவிழாவில் கலந்து தங்களது பக்தி பூர்வமான வேண்டுதலைச் செய்துவருகின்றார்கள். இந்நிலையில் 25 நாள்களாக விரதம் இருந்து நல்லூர் முருகனை வழிபடும் பக்தர்கள் செப்ரெம்பர் 2 ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் தங்களது விரதத்தைப் பூர்த்தி செய்து கொள்வார்கள்.

இந்த விரத பூர்த்தி தினமான தீர்த்த தினத்தை யாழ். மாவட்டத்தினருக்கு, பாடசாலை உட்பட அரச ஊழியர்களுக்கு குறிப்பாக இந்துக்களுக்கு விடுமுறை தினமாக அறிவிக்க வேண்டும் என்று சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா என்னிடமும் வடமாகாண ஆளுநர் பி . எஸ் . எம் . சாள்ஸிடமும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கையின் பிரதிகள் வடமாகாண தலைமைச் செயலாளர் எல். இளங்கோவன், யாழ். கல்வி அமைச்சின் செயலாளர் எம் . பற்றிக் டிறஞ்சன், யாழ்.மாவட்ட செயலாளர் எம்.பிரதீபன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நல்லூர் திருவிழாவானது இலங்கை நாட்டின் ஒரு தேசிய திருவிழாவாக சகல இன மக்களாலும் பக்திபூர்வமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இந்த தீர்த்த திருவிழா அன்று புண்ணிய விரதத்தை மக்கள் பூர்த்தி செய்து கொள்வதற்காக அத்தினத்தை விடுமுறை தினமாக அறிவித்தால் இந்து மக்கள் நன்றி உடையவர்களாக இருப்பார்கள் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி நிச்சயம் இல்லை!

## அமீர்அலி தெரிவிப்பு

(பழுவூரான்)

இலங்கையில் வாக்கு வங்கிகள் உள்ள கட்சிகளாக மொட்டுக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் தான் காணப் படுகின்றன. ரணில் விக்கிரம சிங்கவின் வெற்றி நிச்சயம் இல்லை என்று முன்னாள் பிரதி அமைச்சர் எம். எஸ். அமீரலி தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று செவ்வாய்க் கிழமை சஜித் கட்சி ஆதரவாளர்க ளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே முன்னாள் பிரதி அமைச்சர் எம். எஸ். அமீரலி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரி விக்கையில்,

தற்போதைய தேர்தல் நிலவரப்படி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மூன்றாவது இடத்தில் உள்ளார். அடுத்து வரும் சில தினங்களில் நாமல் ராஜ பக்ஷ இந்த இடத்துக்கு வந்து விடுவார். ஏனெனில் அவர்களது கட்சிக்கு என்று ஒரு வாக்கு வங்கி உள்ளது. இலங் கையில் வாக்கு வங்கிகள் உள்ள கட்சியாக மொட்டு கட்சியும் ஐக்கிய மக் கள் சக்தியும்தான் காணப்படுகின்றன. ரணிலுடைய கட்சிக்கு வாக்கு வங்கி




இல்லை என்பது எல்லோருக்கும் தெரி யும். ஜேவிபி கட்சிக்கும் 4 லட்சம் வரை யான வாக்குகள் காணப்படுகின்றன.

தற்போது அக்கட்சி ஒரு வளர்ச்சிப் போக்கைக் காட்டுகிறது.

நமது ஜனாதிபதி வேட்பாளரின் வெற்றியில்தான் இங்குள்ளவர்களின் வெற்றி தங்கியுள்ளது. உங்களது பகுதிகள் அபிவிருத்தி காண வேண்டு மானால் சஜித்தின் வெற்றி முக்கியம். சஜித் பிரேமதாஸவுக்கு 54 லட்சம் வாக்குகள் ஏற்கனவே உள்ளன. இருப்பினும் மேலதிகமாக 15 லட்சம் வாக்குகளே எமக்குத் தேவைப்படு கின்றன. அதற்கான பணிகளை நாம் தற்போது முன்னெடுத்து வருகின்றோம்.

சஜித் பிரேமதாஸவின் வெற்றி நிச்சயம். அவருடன் இலகுவாக அணுகி எமது வேலைத் திட்டங்களை முன் னெடுக்க முடியும். ஏற்கனவே மட்டக் களப்பு மாவட்டத்தில்தான் அதிகமான வீட்டுத் திட்டங்களை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்தவர். அவர் ஜனாதிபதி ஆனாலும் வீடமைப்பு அமைச்சை தன்னிடமே கொண்டு அனைத்து வேலைகளையும் நிறை வேற்றிக் கொள்ள திட்டமிட்டுள்ளார்.– என்றார்.

# மன்னார் சுகாதார அபிவிருத்திக்கு 850 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட சுகாதார அபிவிருத்திக்கு 850 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் புதிய பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்தியர் பி.கே.விக்கிரமசிங்க நிய மிக்கப்பட்டு கடந்த 3 மாத காலப்பகுதியில் இந்த நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் சுகாதார துறையில் உள்ள குறைபாடுகள் குறித்து விசேட அறிக்கை ஒன்றை தயாரித்து அரச அதிபர், சுகாதார அமைச்சு, உரிய அமைச்சர்கள் மற்றும் மன்னார் ஆயர் ஆகியோருக்கு சமர்ப்பித்து உடனடியாக குறைபாடுகளை நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்திருந்தார்.

அவர் முன் வைத்த பல்வேறு குறை பாடுகள் தொடர்பான கோரிக்கைகள் உரிய திணைக்களங்கள் ஊடாக பரி சோதனைக்கு உட்படுத்தப்பட்டு நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.



அமைச்சு மட்டத்தில் இருந்து விசேட குழுவினர் மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டு குறைபாடுகள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

இதனடிப்படையில் உடனடியாக அபிவிருத்தி மற்றும் பொருள்கள் கொள்வனவுக்காக 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏனைய கட்டட அபிவிருத்தி பணிக ளுக்கு 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்வதற்கான ஒப்புதல் அமைச்சால் வழங்கப்பட்டது.

மேலும் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையின் கீழ் பயன்படுத்த 2 வாகனங்கள் கொள் முதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் பயிற்சியை பூர்த்தி செய்து நியமனம் பெற்றுக் கொண்ட 39 வைத்தியர்கள் மன்னார் மாவட்டத்துக்கு நியமிக்கப்பட் டுள்ளனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தி யசாலைக்கு நிரந்தரமான புதிய வைத்திய நிபுணர்களை நியமித்து அவர்கள் ஊடாக பயிற்சி வைத்தியர் களை உள்வாங்குவதற்கு சுகாதார அமைச்சும் ஒத்துழைப்பு வழங்கி யுள்ளது.

மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்கு சி.ரி. ஸ்கேன் இயந்திரம் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அரசகரும மொழித்தேர்ச்சி வகுப்பு ஆலையடிவேம்பில்

(எஸ்.எம்.எம்.றம்ஸான்)

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஏற்பாட்டில் அரச உத்தி யோகத்தர்களுக்கான 150 மணித்தியால அரச கரும மொழித்தேர்ச்சி பயிற்சி வகுப்புக்களின் இறுதிநாள் நிகழ்வு ஆலையடிவேம்பு பிரதேச கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

பொது நிர்வாக சுற்று நிருபத்துக்கு அமைவாக அரச உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய அரசகரும மொழித்தேர்ச்சி தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சி வகுப்புக்களின் இறுதி நாள் நிகழ்வில் பல்வேறு நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொண்ட அரச உத்தியோகத்தர்களின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். பிரதேச செயலக கிராம நிர்வாக உத்தியோகத்தர் பரிமள வாணி சில்வெஸ்டர் க.சோபிதா மற்றும் வளவாளர்களான ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ,ருமொழி வளவாளர்களான திருமதி சரோஜா தெய்வநாயகம், மகேசிக்க உள்ளிட்ட வர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பயற்சி நெறியில் பங் கேற்ற அரச உத்தியோகத்தர்கள் தங்கள் பயிற்சி நெறியில் கற்றுக்கொண்ட விடயங்கள் தொடர்பில் கலை நிகழ்வுகள் மூலமாக வெளிப்படுத்தினர்.

# தரமான கல்வியை வழங்குதலில் மொழியின் பிரயோகம் அவசியம்

## பீடாதிபதி பேராசிரியர் முஸ்தபா தெரிவிப்பு





(அம்பாறை நிருபர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தமட்டில் கணிசமான அளவு சிங்கள மொழியை தாய் மொழியாகக் கொண்ட மாணவர்களும் ஊழியர்களும் உள்ளனர். இவ்வாறான சூழலில் தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குவது என்ற இலக்கை நாங்கள் எட்டுவது என்றால், எங்களிடமுள்ள சிங்கள அறிவை மேலும் வளப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

எனவே கிடைத்துள்ள சிறந்த சந்தர்ப்பத்தை நாங்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தென்கிழக்குப் பல்கலைக் கழக வர்த்தக பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபா தெரிவித்தார்.

தேசிய மொழி கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும் தென்கிழக்கு பல்கலைக் கழக ஊழியர் மேம்பாட்டு நிலையமும் இணைந்துநடத்தும், ஊழியர்களுக்கான இரண்டாம் மொழி சிங்கள, கற்கை நெறிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு, ஊழியர் மேம்பாட்டு நிலைய பணிப்பாளர் கலாநிதி எச்.எம். நிஜாம் தலைமையில், தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கலந்து கற்கை நெறியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே பேராசிரியர் முஸ்தபா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊழியர் மேம்பாட்டு நிலையத்தின் திட்ட இணைப்பாளர் சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.எச். நபாரின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் முஸ்தபா,

மாணவர்களுக்கான தரமான கல்வியை வழங்க முயலும்போது அவர்கள் சார்ந்த மொழியின் ஊடாகக் குறித்த விடயம் அவர்களுக்குச் சென்றடையுமாக இருந்தால் மிக இலகுவாக புரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

தென்கிழக்கு பல்கலைக்கழகம் இந்தக் கற்கை நெறிக்காகச் சுமார் இரண்டு மில்லியன் ரூபா பணத்தைச் செலவிடுகின்றது. எனவே பல்கலைக் கழகத்தின் எதிர்பார்ப்பு நிறைவேற அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற் படுங்கள்.– என்றார்.

நிகழ்வில் தேசிய மொழி கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இணைப்பாளர் தேசகீர்த்தி தங்கராஜ் கல்யாணி, கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் அலுவலர் ஜெ. பாலரஞ்சனி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகர் எம்.எம். றிபாவுடீன், தேசிய மொழி கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வளவாளர்கள் மற்றும் கற்கையை தொடரும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# மாற்றத்தை மாற்றிக் காட்டியவரும் செய்தவரும் சஜித் பிரேமதாஸவே!

## இம்ரான் எம்.பி. தெரிவிப்பு



(அபு அலா)

எமது வரலாற்றில் பல எதிர்கட்சித் தலைவர்களை நாம் கண்டுள்ளோம். அவர்கள் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் அரசை விமர்ச்சிக்கவும் அரசை எவ்வாறு கவிழ்க்கலாம் என்ற சிந்தனையில் இருப்பதையே நாம் கண்டுள்ளோம். இந்த எண்ணங்களிலிருந்து ஒரு மாற்றத்தை மாற்றிக் காட்டியவர் சஜித் பிரேமதாச என்று பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து நேற்று (26) கந்தளாய் பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்று கையில்,

இன்று எல்லாரும் கேட்கும் விடயம் சிஸ்டம் மாற்றமாகும். பலர் மேடைகளிலும், போராட்டங்களிலும் நடைமுறை மாற்றம் பற்றி பேசினாலும் தேர்தல் ஒன்று வரும்போது அதை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. ஆனால் ஜனாதிபதி வேட்பாளர்களில் குறிப்பாக, சஜித் பிரேமதாஸ வரலாற்றில் முதன்முறையாக நடைமுறை மாற்றத்தை மாற்றிக் காட்டியது மட்டுமல்லாமல் செய்து காட்டியவருமாவார். அந்தப் பெருமை சஜித் பிரேமதாஸவை மட்டுமே சாரும்.

கொவிட் பிரச்சினையாக இருந்தாலும் சரி, பொருளாதார நெருக்கடியாக இருந்தாலும் சரி எந்தக் காலத்திலும் விமர்சன அரசியலைச் செய்யவில்லை.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டு நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலைகளுக்கும், வைத்தியசாலைகளுக்கும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க உதவ முடியுமாக இருந்தால், ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் எவ்வாறான அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வார் என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும்.- என்றார்.






# ஈழத்தில் ஊடக அடக்குமுறைகளும் காணாமல்போன பத்திரிகையாளரும்!

■ நவீனன்

(காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் ஓகஸ்ட் 30. இலங்கையில் காணாமல் போன பத்திரிகையாளர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. ஸ்ரீலங்காவில் ஊடக சுதந்திரம் போருக்குப் பின்னரான அரசியலில் புறக்கணிக்கப்பட்டதாகவே உள்ளது.)

போருக்குப் பின்னரான கடந்த ஆண்டுகளில் இலங்கைப் பத்திரிகையாளர்களின் வாழ்க்கை என்பது இரத்தத்தாலும் காயங்களாலும் எழுதப்பட்டிருக்கிறது. அரசுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் பத்திரிகை யாளர்களின் நிலை என்ன என்பதை அறியாமல் கொலை செய்யப்படும் அளவுக்குக் கொண்டு சென்றதும் வரலாறாகும்.


அரசின் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்து தங்கள் குரல் வளைகள் நெரிக்கப்பட்ட நிலையிலும் இறுதிவரை போராடி வந்த கடந்தகால பத்திரிகையாளர்களே இந்தப் போராட்டச் சூழலில் மக்களின் நம்பிக்கைக் குரல்களாக அடையாளம் காணப்பட்டு இருக்கின்றனர்.

பத்திரிகையாளர்கள் எதிர்கொண்ட கடினமான தருணங்களைத் தற்போது நினைவுகூர வேண்டியது காலத்தின் அவசியமாகும்.

### போருக்குப் பின் ஊடக சுதந்திரம்

இலங்கையில் ஊடக சுதந்திரம் போருக்குப் பிந்தைய சூழலில் அரசியலில் புறக்கணிக்கப்பட்ட பரிமாணமாகவே இன்னமும் காணப்படுகிறது என்று சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது. உலகில் பத்திரிகைச் சுதந்திரம் குறித்து 180 நாடுகளைக் கணக்கில் கொண்டு அண்மையில் வெளியிடப்பட்ட சர்வதேசப் பட்டியலில் இலங்கை 165 ஆவது இடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்தபின் அமைதிக் காக பத்திரிகையாளர்கள் மிகவும் அழுத்தமான பிரச்சினைகளுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பேச்சு சுதந்திரம் என்பது ஊடகச் சூழலில் கருத்து வேறுபாடுகளை அமைதிப்படுத்தப் பயன்படுத்துவதாகும். யுத்த காலத்தைவிட இரகசியமாக ஊடகத் துறைகளிலும் குழப்பம் நிலவுகிறது.




அத்துடன் ஊடகத்துறையில் அரசின் அழுத்தம், தணிக்கை போன்றவற்றால் தடைகளைத் தாண்டி நேர்த்தியான போக்கை கடைப்பிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

### கொலையான ஊடகர்களுக்கு நீதி கிடைக்குமா ?

2000 முதல் 2010 வரையிலான ஆண்டுகளில் இலங்கை வீதிகளில் உலா விய வெள்ளை வான்களும்

தொடர்ச்சி▼




# ஈழத்தில் ஊடக அடக்குமுறைகளும் காணாமல்போன பத்திரிகையாளரும்!

தொடர்ச்சி▲

திடீரெனத் தொலைந்து போகும் பத்திரிகையாளர்களும் மிக எளிதாகக் கடந்து போகக் கூடிய ஒரு நிகழ்வுகளாக இருந்தன.

பத்திரிகையாளர்கள் அரசுக்கு எதிரானவர்களாகச் சித்திரிக்கப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்டிருக்கின்றனர். மயில்வாகனம் நிமலராஜன், பிரகீத் எக்னலிகொட, சிவராம் தராக்கி, கெய்த் நோயார், லசந்த விக்கிரமதுங்க, போடல ஜெயந்தா என அநீதி இழைக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் பட்டியல் பெரிதாகும்.

தராக்கி என்ற புனைப்பெயருடன் எழுதிவந்த தமிழ் ஊடகவியலாளர் சிவராம், அரசுக்கு எதிராக எழுதிய தன்னுடைய ஊடக நண்பர் நடேசன் கொலை செய்யப்பட்டபோது, அரசின் அடுத்த குறி தானாக இருக்கலாம் என்று நண்பர்கள் பலர் தன்னை எச்சரித்ததாகக் காணொலி ஒன்றில் பதிவுசெய்திருந்தார்.

அவர் பதிவிட்டதைப் போல, 2005 ஏப்ரல் 28 அன்று வெள்ளை வானில் கடத்தப்பட்ட சிவராம் அடுத்த நாள் கொலையுண்ட நிலையில் சடலமாகக் கிடைக்கப் பெற்றார். இதே போல் கொல்லப்பட்ட மற்றொரு பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்க, தான் கொல்லப்படப் போகிறோம் என்பதை அறிந்த லசந்த, தனது இறுதித் தலையங்கத்தைத் தன் இறப்புக்குப் பிறகு பிரசுரிக்கச் சொல்லி தனது ஊடக ஊழியர்களிடம் ஒப்படைத்துச் சென்றுள்ளார்.

2,500 வார்த்தைகளைக் கொண்ட அந்தத் தலையங்கத்தை அவர் தனது அலுவலகக் கணினியில் 'ஃபைனல் எடிட்' எனக் குறிக்கப்பட்ட கோப்பில் சேமித்து வைத்திருந்தார். அவர் கொலையின் பின்னர் அந்த 2,500 வார்த்தை தலையங்கத்தை உலகின் முன்னணிப் பத்திரிகைகள் அனைத்தும் பிரசுரித்தன.

"எனது படுகொலை சுதந்திரத்தின் தோல்வியாகக் கருதப்படாது, உயிர் பிழைப்பவர்களுக்கு ஒரு உத்வேகமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்" என்று அந்தத் தலையங்கத்தை முடித்திருந்தார் லசந்த விக்கிரமதுங்க.

போடல ஜெயந்தா, கெய்த் நோயார் போன்றோர் அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். 2010 ஆம் ஆண்டு ஜனவரி 24, ஜனாதிபதி தேர்தலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் காணாமல் போன கார்ட்டூனிஸ்ட் பிரகீத் எக்னலிகொடவின் நிலை என்னவென்று இன்றுவரை தெரியவில்லை.

## ஆள்கடத்தல்களும் காணாமல் போதலும்

இலங்கையில் ஆள்கடத்தல்களும் காணாமல் போதலும் 1980 ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ந்த வண்ணம் உள்ளன. இலக்கத் தகடு அற்ற வாகனங்களில் (வெள்ளைவான் குழு) வரும் இனம் தெரியாத குழுக்களால் பலவந்தமாக இந்த வாகனங்களுக்கு ஏற்றப்பட்டம் நபர்கள் பின் காணாமல் போயினர்.

போர் நடந்த வருடங்களில் இலங்கையில் பலநூற்றுக்கணக்கான தமிழர்கள் கடத்தப்பட்டு அல்லது காணாமல் போயுள்ளனர். உலகில் இலங்கையிலேயே அதிகமானோர் காணாமல் போவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளது.

காணாமல் போவதற்கு அரசே காரணம் என பல காணாமல் போனவர்களின் உறவினர்களும் சாட்சியங்களும் கூறிய போதும் அரசு எந்தவித பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், இத்தகைய குற்ற செயல்களை விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணையங்கள் சரிவர தமது வேலையை செய்யவில்லை என்று அதைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட சர்வதேச சுயாதீன குழு தெரிவித்துள்ளது.

## தேசிய நல்லிணக்கத்துக்கு ஊடக சுதந்திரம்

ஊடக சுதந்திரம் தேசிய ஒருமைப்பாட்டின் நல்லிணக்கத்துக்கு ஒரு காரணியாகும். போர் முடிவுற்ற பின்னர் தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஒரு தேசிய செயற்றிட்டத்தை அறிவித்தது. இலங்கையில் யுத்தம் முடிவடைந்து ஒரு பின்னர், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டதும் அறிந்ததே.

ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் ஆரம்பத்தில் அவநம்பிக்கை காணப்பட்டது. இறுதி யுத்தத்தின் போது, வடக்கு- கிழக்கு மக்கள் படும் துன்பங்கள் தொடர்பில் பல்வேறு தகவல்களை வெளிப்படுத்தும் வகையில் இந்த ஆணைக்குழுவின் நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆயினும் நல்லிணக்க ஆணைக்குழு 2011 நவம்பரில் 400 பக்கங்களுக்கும் அதிகமான அறிக்கையை சமர்ப்பித்திருந்த போதிலும், இரண்டு பக்கங்களுக்கு மேல் ஊடகங்கள் பற்றி குறிப்பிடவில்லை. எவ்வாறாயினும், ஊடகங்கள் பற்றி செய்யப்பட்ட சில பரிந்துரைகள் மிகவும் ஆழமான கண்ணோட்டத்தில் இருந்தன.

கடந்த காலங்களில் ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களை விசாரித்து தகுந்த தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. ஊடகவியலாளர்களின் நடமாடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையில் மீளாய்வு செய்யப்பட்டதுடன், தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்தும் குறிப்பிடப்பட்டது.

தொடர்ச்சி▼




# ஈழத்தில் ஊடக அடக்குமுறைகளும் காணாமல்போன பத்திரிகையாளரும்!

**தொடர்ச்சி▲**

நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய தேவை மற்றும் பரிந்துரைகளில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கியமான அவதானிப்புகள் மற்றும் ஊடகத்துறையின் அவதானிப்புகளும் முக்கியமானவை.

**கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல் அறியும் உரிமை**

கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல் அறியும் உரிமை ஆகியவை சர்வதேச அளவில் அடிப்படை மனித உரிமைகளாக அங்கீகரிக்கப்பட்டு, எந்த நல்லிணக்கச் செயல்முறையிலும் இரண்டும் முக்கியப் பங்காற்றுகின்றன. எனவே, ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் ஊடக சுதந்திரத்தை மேம்படுத்துவதும், அடிப்படை உரிமைகளுக்கு ஏற்ப அதைப் பாதுகாப்பதும் அவசியம்.

ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது பல்வேறு இனங்களுக்கிடையில் அவநம்பிக்கையையும் அச்சத்தையும் ஏற்படுத்தவே வழிவகுக்கும்.

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அழுத்தங்களைத் தவிர்ப்பதற்காக தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். இது ஆக்க பூர்வமான கருத்துப் பரிமாற்றம் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்துதல் மற்றும் நல்லிணக்க ஏற்பாடுகளின் அழுத்தங்களைப் பிரயோகிப்பது போன்றவற்றை பாதிக்கலாம்.

குற்றவியல் சட்டத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகள் போன்ற பாதகமான சட்ட நடவடிக்கைகள் போன்றவை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைத்துலக சட்டம்

அனைத்துலகச் சட்டத்தின் கீழ் ஒரு நபரைக் கைது செய்து அவரது கைதை மறுக்கும் போதும், அவர் வைக்கப்பட்டுள்ள இடத்தை மறைக்கும் போதும் பலவந்தமான காணாமல் போதல் இடம் பெறுகின்றது. காணாமல் போதலானது பொதுவாக சித்திரவதை, நீதிக்குப் புறம்பான கொலையை மேற்கொள்வதற்காகவே இடம் பெறுகின்றது.

இலங்கையில் போரின் போது கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள், காணாமல் போன பத்திரிகையாளர்கள் குறித்து மறுவிசாரணை நடத்தப்படும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்தார்.

இது தொடர்பான வழக்குகளில் இதற்கு முன்பு விசாரணை நடைபெற்றபோதிலும், குற்றவாளிகள் யாரும் தண்டிக்கப்படவில்லை.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது எதிர்க்கட்சிகளுக்காக பிரச்சாரம் மேற்கொண்ட பிரகீத் ஏக்னாலிகோடா என்ற கார்ட்டூனிஸ்ட் திடீரென காணாமல் போனார். அவரது நிலை இதுவரை கண்டறியப்படவில்லை.

கடந்த காலங்களில் கொலை செய்யப்பட்ட, காணாமல் போன பத்திரிகையாளர்கள், அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் குறித்து மறுவிசாரணை நடத்த புதிய அரசு முயற்சித்தது.

**காணாமல் போன மனித உரிமை பணியாளர்கள்**

இலங்கை வடக்கு, கிழக்கு தமிழர் வாழ் பகுதிகளில் யுத்த அனர்த்தங்களால் பொது மக்களிற்கான மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்ட தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களும் கடத்தப்பட்டு காணாமல் போனதும் கொலை செய்யப்பட்டனர்.

மக்களுக்காக பணியாற்றிய தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் மற்றும் மனிதவுரிமை பணியாளர்கள் 57 பேர் கடத்தப் பட்டு கொலை செய்யப்பட்டனர். இந்த விவரத்தை ஆசிய மனித உரிமை ஐ.நா. ஆணையம் மூலம் வெளியிட்டது. இவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஆட்சியில் இருந்தபோது பத்திரிகையாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவியது. குறிப்பாக, விடுதலைப் புலிகள் அமைப்பினரோடு நடைபெற்ற இறுதிப் போரின்போது, பத்திரிகையாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நாடுகளில் இலங்கை முன்னிலை வகித்தது.

பத்திரிகைச் சுதந்திரம் குறித்து 180 நாடுகளைக் கணக்கில் கொண்டு அண்மையில் வெளியிடப்பட்ட சர்வதேசப் பட்டியலில் இலங்கை 165-ஆவது இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் இதுவரைக்கும் 228 டெங்கு நோயாளர்கள்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் டெங்கு தொற்று நோய் அபாயம் வழமையைவிட இந்த ஆண்டு முன்னமே ஆரம்பித்துள்ளமையால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நோயின் அறிகுறி தெண்பட்டால் உடன் வைத்தியரை நாடும்படி மன்னார் மாவட்ட தொற்று நோய் விஞ்ஞான பிரிவு வைத்திய அதிகாரி கதிகாமநாதர் சுதாகர் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட தொற்று நோய் விஞ்ஞான பிரிவு வைத்திய அதிகாரி கதிகாமநாதர் சுதாகர் தெரிவிக்கையில்,

மன்னாரில் இது வரைக்கும் 228 பேருக்கு டெங்கு நோய்யாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இத் தொகை சென்ற ஆண்டுடன் (2023) ஒப்பிடும்போது இந்த ஆண்டு (2024) இது வரைக்கும் சிறிது அதிகமாக காணப்படுகிறது. வழமையாக ஒக்ரோபர் மாதத் தொடக்கத்திலேயே டெங்கு அபாயம் ஏற்படுவது வழமையாக உள்ளது.ஆனால் இந்த வருடம் டெங்கு அபாயம் மன்னாரில் நேரத்துடனே ஏற்பட்டுள்ளது.

ஆகவே ஒவ்வொருவரும் இந்த நோய் பீடிக்காதிருக்க மிக அவதானமாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்யப்பட்டு வருகின்றது.

நீடித்தக் காய்ச்சல் கண்ணுக்குப் பின்னால் நோவு போன்ற விடயங்கள் காணப்படுமானால் தகுந்த வைத்தியரிடம் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தேவை ஏற்படுமானால் இரத்தப் பரிசோதனைக்கும் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும். இது தொடர்பாக அரச வைத்தியசாலையை நாடுவது சிறந்தது.

தற்பொழுது டெங்கு நோய் காணப்படும் இடமாக நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் வங்காலையும் மன் னார் நகரம் பிரதேச செயலகப் பிரிவில் சாவக்கட்டு பிரதேசமும் இனம் காணப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் டெங்கு அபாய நிலை தொடர்பில் அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல்




(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை மற்றும் மக்கள் வேறு இடங்களுக்கு சென்று வருகின்றமையால் கடந்த காலங்களை விட இந்த முறை மன்னார் மாவட்டத்தில் டெங்கு பரவல் அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்த நிலையில் மாவட்டத்தில் டெங்கு நுளம்பின் தாக்கத்தை கட்டுப்படுத்த துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கும் நோக்குடன் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் அவசர கலந்துரையாடலுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகிற நிலையில் அவற்றை கட்டுப்படுத்துவது தொடர்பான அவசர கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மன் னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் திணைக்கள தலைவர்களை ஒன்றிணைத்து மாவட்ட டெங்கு கட்டுப்பாட்டு குழுவினர்களான பிரதேசச் செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், பொது சுகாதாரப் பரிசோதர்கள், பொலிஸார், கடற்படை மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக அரச அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பான அவசர கலந்துரையாடலை நாம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

மன்னார் நகரம், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சில கிராமங்களில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதன் போது பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. இதற்கு இணங்க .மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகச் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

கலந்துரையாடலுக்கு அமைவாக மக்களால் வீடுகளில் வளர்க்கப்படுகின்ற அலங்கார தாவர சாடிகளில் நீர் காணப்படுவதால் அவற்றில் அதிக அளவில் டெங்கு நுளம்புக்குடம்பிகள் காணப்படுகின்றமை அவதானிக்கப் பட்டுள்ளது.

அதற்கு அமைவாக நீர் நிற்கக் கூடிய அலங்கார பூ தாவரங்களை நீக்கி ஏனைய மாற்றீடான அலங்கார தாவரங்களை வளர்ப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் நகரம் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் டெங்கு நுளம்பின் பரவல் அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் வீடு வீடாகச் சென்று டெங்கு பரிசோதனைகளை முன்னெடுத்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது பாடசாலை விடுமுறை காலம் என்பதால் எதிர்வரும் வாரம் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வுள்ள நிலையில் அனைத்து பாடசாலைகளிலும் டெங்கு நுளம்பு சிரமதான பணிகளை முன்னெடுத்து நீர் தேங்கி நிற்கும் இடங்களைத் தவிர்த்து மாணவர்கள் எவ்வித அச்சமும் இன்றிக் கல்வியைத் தொடர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வலயக்கல்வி பணிமனை ஊடாக உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கிராம மட்டத்தில் இருக்கும் சுகாதார மேம்பாட்டுக் குழு ஊடாக கிராமங்களில் டெங்கு நுளம்பின் பரவல் காணப்படும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு திணைக்களங்களிலும் டெங்கு தொடர்பில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் ஊடாக அலுவலகங்களில் டெங்கு நுளம்பின் பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.-என்றார்.



# அக்கரைப்பற்று வம்மியடிப் பிள்ளையார் ஆலயத்தில் அன்னதான மடம் அமைப்பு

(எஸ்.எம்.எம்.றம்றான்)

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் ஆலயத்தின் அன்னதான மடம் அமைக்கும் பணிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

அம்பாரை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசனின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஆலயததுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் உதவியோடு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டது.

ஆலய தலைவர் வி.சுகிர்தகுமார் தலைமையில் இடம்பெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் கலந்து கொண்டதுடன் அவரது இணைப்பு செயலாளர் ம.கண்ணதாசனும் கலந்து கொண்டார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்னாடை போர்த்தி மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டு பூஜைகள் இடம்பெற்று அடிக்கல் நடும் நிகழ்வும் இடம்பெற்றது.



ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப.கேதீஸ் வரக்குருக்கள் பூஜை வழிபாடுகளை நடத்தி வைத்ததுடன் ஆலய முன்னாள் தலைவர் நா.அழகரெத்தினமும் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தனர்.

நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மயூரி மற்றும் நிர்வாக சபை, திருப்பணிச்சபை மற்றும் மகளிர் அணியினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# லிந்துலை சுகாதார நிலையத்தை பாதுகாப்பான இடத்துக்கு மாற்றுக!

(மஸ்கெலியா நிருபர்)

லிந்துலை பொது சுகாதார வைத்திய நிலையக் கட்டடத்தை உடனடியாக பாதுகாப்பான இடத்துக்கு மாற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடம் அமைந்துள்ள பிரதேசம் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்பட்டு வருகிறது என்றும் அந்த கட்டடத்தை பிரிதொரு இடத்துக்கு உடனடியாக மாற்றுமாறும் தேசிய கட்டட பொருள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் கடந்த இரு வருடங்களுக்கு முன் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இருந்த போதிலும் இன்றுவரை அந்தக் கட்டடம் பாதுகாப்பற்ற ஆபத்தான இடத்திலேயே இயங்கி வருகிறது.

கடந்த இரு தினங்களாக இந்தக் கட்டடத்துக்குப் பின்னால் இருக்கும் மண் மேட்டில் இருந்து கற்கள் சரிந்து வருவதன் காரணமாக அந்த அலுவலகச் செயற்பாடுகளைத் தற்காலிகமாக லிந்துலை பிரதேச வைத்தியசாலை கட்டடத்திற்கு மாற்றுமாறு நுவரெலியா மாவட்ட சுகாதார அதிகாரி அறிவித்துள்ளார் என்று லிந்துலை பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி ரேஷ்னி துரைராஜ் நேற்று தெரிவித்தார்.

கற்கள் சரிந்து விழுந்துள்ளதன் காரணமாக லிந்துலை பிரதேச பொது சுகாதார வைத்திய நிலையத்தின் சுவர்கள் மற்றும் கட்டடங்கள் சேதம் அடைந்துள்ளன. இந்த நிலையில் தொடர்ந்தும் அவ்விடத்தில் தமது சேவைகளை வழங்குவது தொடர்பில் தமக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் அங்குள்ள உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் அலுவலகத்தைப் பிரிதொரு கட்டடத்துக்கு மாற்றுமாறு கடந்த காலங்களில் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான அனுமதி இன்று வரை கிடைக்கப் பெறவில்லை.

தற்போது மேலும் இரு இடங்களான வால்ட்ரீம் தோட்ட விடுதி, லெம்லியர் தோட்ட தேயிலை தொழிற்சாலை என்பன பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அவ்விடத்தைப் பெற்று தருவதற்கு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரப் படுகிறது.



# சமநிலையில் நிறைவடைந்த உதைப்பந்தாட்டப் போட்டி

(எஸ்.எம்.எம்.றம்ஸான்)

மருதமுனை 40 வயதுக்கு மேற்பட்ட உதைபந்தாட்ட அணிக்கும், அக்கரைப்பற்று 40 வயதுக்கு மேற்பட்ட உதைப்பந்தாட்ட அணிக்கும் இடையிலான சிநேக பூர்வ உதைபந்தாட்ட போட்டி மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் முதல் பாதி வேளை நிறைவடையும்வரை இரு அணிகளும் எதுவித கோலும் போடாமல் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

இடைவேளை நேரம் முடிவடைந்த பின்னர் போட்டி ஆரம்பிக்கப்பட்டு 15 நிமிடங்கள் தாண்டிய போது அக்கரைப்பற்று அணி மருதமுனை அணிக்கு எதிராக தமது முதலாவது கோலை புகுத்த ஐந்து நிமிடங்களின் பின்னர் மருதமுனை அணி அக்கரைப்பற்று அணிக்கு எதிராக ஒரு கோலைப் புகுத்தியது. இறுதியில் (01:01) என்ற கோல் கணக்கில் சமநிலையில் போட்டி நிறைவடைந்தது.



போட்டியின் வீரர்கள் அறிமுக நிகழ்வின் போது மருதமுனை ஆபிதா ஹேண்ட்லூம் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் இஸட். என். சுஹைப் ரூமி பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீரர்களுக்கு கைலாகு கொடுத்து வாழ்த்தினார்.

# அம்பாறை கரையோரப் பிரதேசங்களில் டெங்கு நோய் பரவும் அபாய நிலைமை

## அவதானமாக இருக்குமாறு பொது மக்களுக்கு எச்சரிக்கை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் பொது மக்கள் மிகவும் முன் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸதீன் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலவலகத்துக்கு உட்பட்ட சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, பாண்டிருப்பு, சம்மாந்துறை, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில் மற்றும் இறக்காமம் ஆகிய பிரதேசங்களில் அதிகளவிலான நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. அதனைக் கட்டுப்படுத்த பொது மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் திடீரென இடைவிட்ட மழை காலம் ஆரம்பித்துள்ளது. கடும் வெயிலும் காணப்படுகிறது. இதனால் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு சாதகமான சூழலை தோற்றுவிக்கக் கூடும் என்ற காரணத்தால் பிரதேச மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மக்கள் தங்களது வீடு மற்றும் சுற்றுப்புற சூழல், நீர் தேங்கி நிற்கும் பொருள்கள், நீர் தேங்கும் இடங்கள், வெற்று வளவுகள், கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தோணி, படகு போன்ற இடங்கள் குறித்து அவதானத்துடன் தொழிற்படுமாறும் பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பொது மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். இதேவேளை மக்கள் வசிக்கும் குடியிருப்பு பிரதேசங்களில் உள்ள வடிகான்களில் நீண்ட காலத்துக்குக் கழிவுநீர் தேங்கியுள்ளது. இது குறித்து கல்முனை மாநகரசபையின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாகவும் சுகா தார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.



## மு.க.ஸ்டாலின் சென்ற விமானத்துக்கு

# வெடிகுண்டு மிரட்டல்

தமிழ்நாடு முதலமைச்சர் சென்ற விமானத்தக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதால் பெரும் பர பரப்பு ஏற்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக நேற்றிரவு அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.

சென்னை விமான நிலையத்திலிருந்து நேற்று இரவு 10.16 மணிக்கு புறப்பட்ட எமிரேட்ஸ் விமானம் மூலம் துபாய் சென்று அங்கிருந்து வேறு விமானம் மூலம் அமெரிக்கா சென்றுள்ளார்.

அங்கு அவர் 14ஆம் திகதிவரை அரசு முறை பயணம் மேற்கொள்வார். இன்றிரவு சான்பிரான் சிஸ்கோ சென்றடையும் முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் நாளை அங்கு நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்வார்.

இந்நிலையில் சென்னையிலிருந்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பயணித்த எமிரேட்ஸ் விமானத்திற்கு நேற்றிரவு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சென்னையிலிருந்து எமிரேட்ஸ் விமானத்தில் துபாய் சென்று அங்கிருந்து அமெரிக்கா செல்வதாக முதலமைச்சரின் பயணத்திட்டம் வகுக்கப்பட்டிருந்தது.

அதன்படி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று இரவு 8.40 மணிக்கே சென்னை விமான நிலையத் துக்குச் சென்றுவிட்டார். அங்கு அமைச்சர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் அவரை வழியனுப்பி வைத்தனர்.

பின்னர் அவர் நேற்றிரவு 10.16 மணிக்கு புறப்பட்ட எமிரேட்ஸ் விமானத்தில் பயணம் செய்தார்.

இந்த விமானம் துபாயில் தரையிறங்கியதும் அங்கு இறங்கி வேறு விமானம் மூலம் அவர் அமெரிக்கா சென்றார்.

இந்நிலையில், சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பயணம் செய்த எமிரேட்ஸ் விமானம் பறந்துகொண்டிருந்தபோது அந்த விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் வந்ததை அறிந்த அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர்.

சென்னை விமான நிலைய இயக்குநருக்கு மின் னஞ்சல் மூலம் நேற்று இரவு 7.55 மணிக்கு இந்த வெடிகுண்டு மிரட்டல் கிடந்துள்ளது. ஆனால், அதை எவரும் அப்போது பார்க்கவில்லை. இரவு 10 மணிக்குப் பின்னர்தான் பார்த்துள்ளனர். அதன்பின்னர் பதறி யடித்து பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர். ஆனால், அதற்குள் முதலமைச்சர் பயணம் செய்த எமிரேட்ஸ் விமானம் புறப்பட்டுச் சென்றுவிட்டது.

இதனால் அதிகாலை துபாய் சென்றடையும் வரை 4 மணி நேரம் அதிகாரிகள் மிகவும் பதற்றத்துடன் இருந்துள்ளனர். இன்று அதிகாலையில் துபாயில் விமானம் தரையிறங்கிய பிறகு அதில் சோதனை நடத்தப்பட்டது. அப்போதுதான் வெடிகுண்டு மிரட்டல் புரளி எனத் தெரியவந்தது.

சென்னை விமான நிலையத்திற்கும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டமையால் மத்திய தொழில் பாது காப்பு படையினர் மோப்ப நாய் மற்றும் மெட்டல் டிடெக்டர் கொண்டு பல இடங்களில் சோதனை நடத் தினார்கள். இந்த சோதனையில் அந்த மிரட்டல் புரளிதான் எனத் தெரியவந்தது.

வெடிகுண்டு மிரட்டல் காரணமாக பாதுகாப்புப் படையினர் சோதனை நடத்தியதால் பயணிகள் சற்றுப் பதற்றமடைந்தனர்.

கடந்த சில நாட்களாகவே விமான நிலையத் திற்கும், விமானங்களுக்கும் மிரட்டல் வந்த வண்ணம் உள்ளது. கடந்த 15 நாள்களில் மாத்திரம் விமான நிலைய முகாமையாளருக்கு 3 மின்னஞ்சல்களில் மிரட்டல் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மலையாள சினிமாவை புரட்டிப் போட்ட

# MeToo அலை

## இதுவரை 18 முறைப்பாடுகள் அளிப்பு

## மலையாள நடிகர் சங்கம் கலைப்பு

மலையாள சினிமாவில் எழுந்துள்ள பாலியல் முறைப்பாடுகளால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மலையாள நடிகர் சங்கம் கலைக்கப்பட்டுள்ளது.

மலையாள சினிமாத் துறையில் பாலியல் துன்புறுத்தல் நடைபெறுகிறது என நீதிபதி ஹேமாவின் அறிக்கை வெளிப்படுத்தியிருந்தது.

அதிலிருந்து மலையாள சினிமா நடிகைகள் தங்களுக்கும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெற்றன என முறைப்பாடு செய்யத் தொடங்கியுள்ளனர்.

இப்படிப் பல நடிகைகள், சினிமாத் துறையைச் சேர்ந்தவர்கள் முறைப்பாடு செய்ய ஆரம்பித்தமையால் மலையாள சினிமாத் துறை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

சினிமா நட்சத்திரங்கள் பொது வெளியில் முறைப்பாடுகளைக் கூறிய போதிலும், பொலிஸ் நிலையத்தில் அதிகாரபூர்வமாக முறைப்பாடு செய்யவில்லை.

இதனால் MeTooவை எதிர்கொள்ள கேரள மாநில அரசால் சிறப்பு விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. விசாரணைக் குழுவிடம், பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுத் தொடர்பாக இதுவரை 17 வழக்குகள் பதியப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சோனியா மலிஹார் என்ற நடிகை 2013ஆம் ஆண்டு சினிமா படப்பிடிப்பின்போது, பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானேன் எனத் தெரிவித்துள்ளார். மேலும், எனது முறைப்பாடு தொடர்பாக ஊடகங்கள் நடிகர் ஜெயசூர்யாவைத் தொடர்பு படுத்தக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.



பாலியல் துன்புறுத்தல் பல நடிகர்கள் மீது கூறப்பட்டுள்ளதால் மலையாள நடிகர்கள் சங்கம் கலைக்கப்பட்டுள்ளது.

இந்த 17 முறைப்பாடுகள் தொடர்பாக நடிகர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் சினிமாத்துறையைச் சேர்ந்தவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தக்கூடும் எனத் தெரிகிறது.

முன்னதாக நடிகை மினு முனீர் நடிகர்கள் எம். முகேஷ், ஜெயசூர்யா, மணியன்பிள்ளை ராஜு, எடவேலா பாபு ஆகியோர் மீது துன்புறுத்தல் குற்றச்சாட்டைத் தெரிவித்திருந்தார்.

நான் படப்பிடிப்பு தளத்தில் கழிவறைக்கு சென்றிருந்தேன். அங்கிருந்து வெளியேறியபோது, எனக்குப் பின்னால் இருந்து ஜெயசூர்யா என்னைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தார். எனது அனுமதி இல்லாமல் முத்தம் கொடுத்ததால் நான் அதிர்ச்சி அடைந்து அங்கிருந்து சென்று விட்டேன்.

நடிகர் சங்க முன்னாள் செயலாளர் பாபு, அம்மா உறுப்பினர் அட்டை பெறுவதற்கு உதவி செய்வதாகக் கூறி அவர் வசிக்கும் வீட்டிற்கு அழைத்தார். அப்போது உடல் தொடர்பான துன்புறுத்தலுக்கு ஆளானேன்.

நடிகரும், சி.பி.எம். எம்.எல்.ஏ.வுமான நடிகர் முகேஷ், அவருடைய ஆசைக்கு இணங்க மறுத்ததால் நடிகர் சங்க உறுப்பினர் அட்டை வழங்க மறுத்துவிட்டார்" எனக் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்நிலையில் அவருக்கு மிரட்டல் செய்தி அனுப்பப்பட்டுள்ளது. சமூக வலைத்தளம் மூலம் வந்த மிரட்டலை அவர் ஸ்கிரீன்ஷொட் எடுத்து பகிர்ந்துள்ளார்.



# அமெரிக்க அதிபர் தேர்தலில்

## டொனால்ட் டிரம்புக்கு வெட்டு

## கமலா ஹாரிஸ்க்கு ஆதரவு

### டிரம்பின் கட்சி உறுப்பினர்கள் 200 பேர் அதிரடி அறிவிப்பு

அமெரிக்க அதிபர் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், டிரம்பின் கட்சியைச் சேர்ந்த 200 பேர், டிரம்புக்கு ஆதரவு தெரிவிப்பதற்குப் பதிலாக எதிர்க்கட்சி வேட்பாளரான கமலா ஹாரிஸ்க்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, கமலா ஹாரிஸ் டன் விவாதத்துக்கு வர முடியாது எனத் தெரிவித்து வந்த ட்ரம்ப் அதற்குத் தாம் தயார் என அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் வரும் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் குடியரசுக் கட்சி வேட்பாளராக முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் போட்டியிடுகிறார். இதேபோன்று, ஜனநாயகக் கட்சி வேட்பாளராக கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார்.

இந்நிலையில், முன்னாள் அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷிடம் முன்பு பணியாளர்களாக வேலை செய்த குடியரசுக் கட்சியைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் வெளிப்படையான கடிதம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில், அதிபர் தேர்தலில், துணை அதிபராகப் பதவி வகித்து வரும் கமலா ஹாரிஸ்க்கு தங்களுடைய ஆதரவை வெளிப்படுத்தி உள்ளனர்.

அவர்கள், குடியரசுக் கட்சியைச் சேர்ந்த அதிபர் வேட்பாளரான டிரம்புக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு பதிலாக, ஜனநாயகக் கட்சியின் கமலா ஹாரிஸ்க்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அத்துடன், குடியரசுக் கட்சியினர் மற்றும் பழமைவாதிகளான தனிநபர்களும் கமலா ஹாரிஸை ஆதரிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் வெளியிட்ட கடிதத்தில்,

முன்னாள் அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ், மறைந்த செனட் உறுப்பினர் ஜோன் மெக்கெயின் மற்றும் அப்போது ஆளுநராக இருந்த மிட் ரோம்னி ஆகியோர் 4 ஆண்டுகளுக்கு முன் ஒன்றாகச் சேர்ந்து, சக குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களை எச்சரித்தனர்.

டிரம்ப்பை மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுப்பது நம்முடைய நாட்டுக்குப் பேரிடராக அமைந்து விடும் எனத் தெரிவித்தனர்.

இந்த சூழலில் நாம் மீண்டும் ஒன்றிணைந்துள்ளோம். 2020ஆம் ஆண்டு மேற்கொண்ட அறிவிப்புகளை மீண்டும் செயல்படுத்துவோம்.

முதன்முறையாக கமலா ஹாரிஸ்க்கு வாக்களிக்கவுள்ளோம் எனக் கூட்டாக அறிவிக்கிறோம்.

கமலா ஹாரிஸ்டன் கொள்கை அடிப்படையில் வேற்றுமைகள் உள்ளன. ஆனால், அதற்காக மாற்றாக உள்ளவரை ஏற்றுக் கொள்ள முடியாது” எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலின்போதும், இந்தக் குழுவினர் டொனால்ட் டிரம்புக்கு எதிர்ப்பைத் தெரிவித்து இருந்தனர்.

இந்த சூழலில், கமலா ஹாரிஸ் டன் விவாதம் நடத்த டிரம்ப் ஒப்புக் கொண்டிருக்கிறார். அதற்கு சில நிபந்தனைகள் மற்றும் விதிகளையும் குறிப்பிட்டுள்ளார்.

பக்கங்கள் 06

கனடா முரசு

புதன்கிழமை 28/08/2024

## தொலைபேசி வழியாக உரையாடி கடனட்டையில் பணம் அபகரிப்பு

கனடாவின் கியூபிக் மாகாணத்தில் தொலைபேசி வழியாக இடம் பெறும் பண மோசடி குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கெடினேயுவில் வாழும் 02



### கலகக்காரர்களின் அச்சுறுத்தல்களையும் மீறி

# தமிழர் தெருவிழா வெற்றி!

### கனடியத் தமிழர் பேரவை அறிக்கையில் தெரிவிப்பு

ஒன்ராரியோ, ஒகஸ்ட் 28

பத்தாவது ஆண்டு தமிழர் தெருவிழா பாரிய வெற்றி என கனடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கனடியத் தமிழர் பேரவை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

‘கனடிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் தமிழர் தெருவிழா இந்த ஆண்டு பத்தாவது முறையாக மார்க்கம் வீதியில் 24 ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெற்றிருந்தது. தமிழர்களின் கலை, பண்பாடு, உணவுப்பழக்கங்கள், வாழ்க்கைமுறை, வரலாறு என அனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த விழாவின் பத்தாவது ஆண்டு கொண்டாட்டத்திற்கு பல சவால்கள், குழப்பங்கள், தடைகள் ஏற்படுத்தப்பட்டபோதும், பொது மக்கள் அச்சுறுத்தப்பட்டபோதும், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் ஆதரவுடன் தமிழர் தெருவிழா வெற்றிகரமாக நடத்தப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இத்தனை எதிர்மறையான கருத்துகளுக்கும், பொய் பிரசாரங்களுக்கும், தடைகளுக்கும் மத்தியிலும் தமிழ் மக்கள் எங்களோடு உடனிருந்து தமிழர்களின் சிறப்பாக திகழும் கோடைகால கொண்டாட்டத்தை சிறப்பாக நடத்த உதவியதற்கும் ஏற்பாட்டுக்குழு சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
“Voice of Tamil Canadians”

இந்த ஆண்டு தமிழர் தெருவிழாவில் வழமைபோலவே பல தமிழர் பாரம்பரிய நிகழ்ச்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டிருந்ததோடு, பல தமிழ் வணிக நிலையங்களும் எங்களோடு இணைந்து பயணிக்க ஆர்வமாகப் பதிவு செய்து கொண்டிருந்தனர். வெற்றியின் படிகளில் வளர்ந்து நிற்கின்ற தமிழர் தெருவிழாவின் உயர்ச்சியை விரும்பாத சிலரால் தமிழர் தெருவிழாவை முடக்கிவிட பல சதித்திட்டங்கள் நிகழ்த்தப்பட்டன. தமிழர் தெருவிழாவிற்கு அனுசரணை வழங்க முன்வந்தவர்கள் மிரட்டப்பட்டதோடு, கலைஞர்கள், தன்னார்வலர்கள், வணிக நிறுவனங்கள் என அனைவ ரையும் குழப்பவும் தங்கள் பக்கம் நிற்கவும் கட்டாயப்படுத்தப்பட்டது.

24 ஆம் திகதி சனிக்கிழமை கோலாகலமாக தமிழர் தெருவிழா மார்க்கம் வீதியில் மதியம் ஆரம்ப நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் பல்லாயிரக்கணக்கான மக்கள் தம் குடும்பங்கள் சகிதம் தமிழர் தெருவிழாவை பார்வையிட வந்தமையோடு தமது முழுமையான ஆதரவையும் தமிழர் தெருவிழாவிற்கு வர ஆரம்பித்தார்கள். இதனால் கோபமடைந்த கலகக்காரர்களால் பல நாசவேலைகள் அரங்கேற்றப்பட்டன. தமிழர் தெருவிழாவிற்கு 02




# கனடியத் தமிழர் பேரவை அலுவலகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டது!

## அச்சுறுத்தல்கள் காரணமாக நடவடிக்கை

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 28

கனடிய தமிழர் பேரவை அலுவலகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் தெருவிழாவில் கனடியத் தமிழர் பேரவையுடன் பணியாற்றிய தொண்டர்கள் மற்றும் ஊழியர்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் காரணமாக, பாதுகாப்பு நோக்கம் கருதி கனடியத் தமிழர் பேரவை அலுவலகம் தற்காலிகமாக மூடப்படவதாக பேரவை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், கனடியத் தமிழர் பேரவையைத் தொடர்பு கொள்ள வேண்டுமானால் அல்லது மெய்நிகர் சந்திப்பு சந்திப்பைக் கோர வேண்டுமானால், mailto:info@canadiantamilcongress.ca என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கோரியுள்ளது.

## தொலைபேசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண் ஒருவர் இந்த மோசடியின் காரணமாக சுமார் 12,000 டொலர்கள் இழந்து உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாம் அமேசான் நிறுவனத்தில் பணியாற்றுகின்றார் எனஜ் கூறி நபர் ஒருவர் மக்களிடம் பண மோசடி செய்து வருகிறார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வாடிக்கையாளரின் கடன் அட்டை மோசடியான கொடுக்கல் வாங்கல் ஒன்றுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக கூறி உரையாடி இந்த மோசடியை அந்நபர் மேற்கொள்கின்றார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

தனது வங்கியில் இருந்து 5000 மற்றும் 7000 டாலர்கள் பணம் மீள பெற்றுக் கொள்ளப்பட்டு மோசடி செய்யப்பட்டுள்ளதாக சூசன் வெட்டெனிஸ் என்ற பெண் தெரிவித்துள்ளார்.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரண்டு வந்த மக்கள் தகாத வார்த்தைகளால் இந்த கலகக்காரர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்கள், மிரட்டப்பட்டார்கள். எந்தவிதமான சட்டரீதியான அனுமதியையும் பெறாது சட்ட ஒழுங்குகளை மீறி ஒலிபெருக்கிகளில் கடுமையான தகாத சொற்கள் பயன்படுத்தப்பட்டு பாடகர்கள், கலைஞர்கள் அனைவரும் மனரீதியாக தாக்கப்பட்டார்கள். இந்த குழப்பவாதிகளின் செயல்களில் பாதிக்கப்பட்டவர்களில் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என அனைவரும் அடங்குகின்றனர். இதன் காரணமாக முதல் நாள் பிரதான மேடை நிகழ்வுகள் எதிர்பார்க்கப்பட்ட நேரத்தைவிட சற்று முன்பாகவே இடைநிறுத்தவேண்டிய சூழல் ஏற்பட்டது. இரண்டாவது நாள் நிகழ்வுகளில் தமிழர் தெருவிழாவை ஆக்கிரமிக்கும் நோக்குடன் குழப்பவாதிகள் விழா நடைபெறும் இடத்தினுள் அத்துமீறி நுழைந்து விழாவை கொண்டாடிக்கொண்டிருந்த மக்களை குழப்ப முனைந்தார்கள். அந்த சதியும் வெற்றி பெறாது போன பட்சத்தில் வன்முறையும் கலகக்காரர்களால் கையில் எடுக்கப்பட்டது. ஆனாலும் மக்கள் பெரும் திரளாக தமிழர் தெருவிழாவிற்கு வந்து கொண்டிருந்ததை எவராலும் தடுக்க முடியவில்லை.

நம் கனடிய தமிழ் சமூகம் எதை விரும்புகின்றது என்பதற்கு இத்தனை தடைகளையும் மீறி தமிழர் தெருவிழாவில் கலந்துகொண்ட பெரும்திரளான மக்களே சாட்சி. கண்ணிற்கு தெரியாத பகைவர் சதி செய்த போதும், நம்மவர் நம்மை வீழ்த்த முனைந்த போதும் அனைத்தையும் தாண்டி நாம் தமிழர் தெருவிழாவின் வெற்றியை உறுதிசெய்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இந்த வெற்றிக்கு காரணமாக எம்முடன் இணைந்துகொண்ட கனடிய தமிழ் மக்களுக்கும், பல மிரட்டல்களை மீறி நம்பிக்கையோடு எம்முடன் இணைந்து பயணித்த வணிக நிறுவனங்களுக்கும், நிகழ்ச்சிகளை வழங்கிய கலைஞர்களுக்கும், எம் மக்களது விழாவை மக்களிடம் கொண்டு சென்ற ஊடகங்களுக்கும், இரவுபகலாக எதையும் எதிர்பாராது எம்மோடு பயணித்த நூற்றுக்கணக்கான தன்னார்வ தொண்டர்களுக்கும், இந்த இரண்டு நாள்களும் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய உதவிய சட்ட அமுலாக்க பிரிவினருக்கும், விழா சிறப்பாக நடைபெற துணையாக நின்ற அனைத்து சேவை வழங்குநர்களுக்கும் கனடிய தமிழர் பேரவை சார்பிலும் தமிழர் தெருவிழா ஏற்பாட்டு குழு சார்பிலும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

‘ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே

செல்லும்வாய் எல்லாஞ் செயல்’

அறத்தின் வழியில் நின்று நாம் செய்பவற்றை சிறப்பாக தொடர்ந்தும் செய்வோம் என்பதை இத்தருணத்தில் உறுதியாக தெரிவித்துக் கொள்கின்றோம்..’



# கனடா பழங்குடி மக்களுடன் அரசு ஒப்பந்தம் கைச்சாத்து!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 28

எனிம்பீகூ ஷாகிஇகான் எனிஷினாபெக் பழங்குடிகளுடன், கனடிய அரசாங்கமானது நில உரிமைத்துவ ஒப்பந்தம் ஒன்றில் இன்று கைச்சாத்திட்டது.

எனிம்பீகூ ஷாகிஇகான் எனிஷினாபெக் பழங்குடிகளுடனான 130 மில்லியன் டொலர்கள் பெறுமதியான இந்த உடன்படிக்கை கால தாமதமானது என்றாலும், கனடிய அரசாங்கத்தின் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு மிகவும் முக்கியமானது என பழங்குடிகள் விவகாரங்களுக்கான அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.


எனிம்பீகூ ஷாகிஇகான் எனிஷினாபெக் பழங்குடிகள் சார்பில் குழுவின் தலைவர் யிவெட் மெட்டான்சினினும், பழங்குடி விவகார அமைச்சரின் சார்பாக சுதேச சேவைகள் அமைச்சர் பெட்டி ஹஜ்ட்டுவும் இந்த உடன் படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

‘உடன்படிக்கையின் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கும், நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கும், எனிம்பீகூ ஷாகிஇகான் எனிஷினாபெக் பழங்குடிகளுடனான உறவைப் புதுப்பிப்பதற்கும் இது எங்கள் தற்போதைய கூட்டுப் பணியில் ஒரு தீர்க்கமான படியாகும்’ என அமைச்சர் கரி ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்.

‘இந்த இழப்பீடு நீண்ட காலமாக நிலுவையில் இருந்தது மற்றும் உரிமைகோரலை நிவர்த்தி செய்வதற்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் பழங்குடிகளுக்கு உரிமையுடன் கடன்பட்டுள்ளது’ எனவும் அவர் கூறியுள்ளார்.








# அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடும் இடைத்தேர்தல் இம்முறை மொன்றியலில்

## மொத்தம் 91 பேர் வேட்பு மனுத் தாக்கல்

கியூபெக், ஓகஸ்ட் 28

மத்திய தேர்தல் வரலாற்றில் அதிக வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தலாக மொன்றியல் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

லிபரல் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான டேவிட் லமெட்டி பதவி விலகியமையைத் தொடர்ந்து இந்த இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

லாசெய்ல்-எமார்ட்-வெர்டுன் தொகுதியில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் குறைந்தது 91 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.

இவர்களில் 79 பேர் கனடாவில் தேர்தல் சீதிருத்தத்தை வலியுறுத்திப் போராடும் குழுவை சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது.

இந்த இடைத்தேர்தல் செப்டம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் இறுதிப் பட்டியல் இன்று வெளியாகும் எனத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.




# பிரதமர் ட்ரூடோ மீது அமைச்சரவை முழுமையான நம்பிக்கை தெரிவிப்பு

நோவா ஸ்கோச்சியா, ஓகஸ்ட் 28

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மீது நம்பிக்கை கொண்டுள்ளதாக அமைச்சரவை தெரிவித்துள்ளது.

ஜஸ்டின்ட்ரூடோதலைமையிலான லிபரல் கட்சி அரசாங்கத்தின் மூன்று நாள் அமைச்சரவை சந்திப்பு நோவா ஸ்கோச்சியா மாகாணத்தின் ஹாலிபெக்ஸ் நகரில் நடைபெறுகிறது.

நடைபெறவுள்ள இலைதுளிர் கால நாடாளுமன்ற கூட்டத்திற்குத் தயாராகும் வகையில் இந்தச் சந்திப்பு நடைபெறுகிறது.

'எங்கள் அரசாங்கத்தின் தலைவராகவும், கனடாவின் பிரதமராகவும், எங்கள் கட்சியின் தலைவராகவுன் அவர் மீது எங்களுக்கு நம்பிக்கை உள்ளது' என துணைப் பிரதமர் கிறிஸ்டியா பிரிலேன்ட் கூறியுள்ளார்.

ஒரு வருடத்திற்கும் மேலாக கன்சர் வேட்டிவ் கட்சியை விட மக்கள் கருத்து வாக்கெடுப்பில் பின்தங்கிய நிலையில் லிபரல் கட்சி உள்ளது.

இந்த அமைச்சரவை சந்திப்பின் போது பிரதமர் தனது அமைச்சர வையை மாற்றக்கூடும் என்ற ஊகங்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# 6 லட்சம் டொலர் பெறுமதியான போதைப் பொருள்கள் மீட்பு

## ஹமில்டனின் பர்லிங்டன் பகுதியில்

கனடாவில் சுமார் ஆறு லட்சம் டொலர் பெறுமதியான போதை பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஹமில்டனின் பர்லிங்டன் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றை சோதனையிட்டபோது இவ்வாறு போதை பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஒரு கிலோ கிராமுக்கு அதிகமான கொக்கெய்ன், ஏழு கிலோ கிராம் எம்.டி.எம்.ஏ. போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகள், பதப்படுத்தப்பட்ட 33 கிலோகிராம் எடையினுடைய கஞ்சா போதை பொருள் உள்ளிட்ட பல போதை பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அந்த வீட்டிலிருந்து சில துப்பாக்கிகளும் தடை செய்யப்பட்ட ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.

மேலதிகமாக சந்தேக நபரிடமிருந்து 2 லட்சம் டொலர் பெறுமதியான பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பெயரில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் 31 வயதான மற்றும் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.




# பரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட்டியில் 125 கனேடிய விளையாட்டு வீரர்கள்

ஒன்ராரியோ, ஒகஸ்ட் 28

2024 பரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட்டியில் கனடிய அணியின் சார்பில் 125 விளையாட்டு வீரர்கள் போட்டியிடுகின்றனர்.

பரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட்டிகள் இன்று ஆரம்பித்து செப்டம்பர் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் கனடியக் கொடியை கூடைப்பந்து வீரர் பெட் அன்டர்சன், நீச்சல் வீரர் கத்தரினா ரொக்ஸொன் ஆகியோர் ஏந்திச் செல்கின்றனர்.

இறுதியாக நடைபெற்ற டோக்கியோ பரா ஒலிம்பிக்ஸ் போட்டியில் ஐந்து தங்கம் உட்பட மொத்தம் 21 பதக்கங்களை கனடா வென்றமை குறிப்பிடத்தக்கது.

# தலைமைப் பதவியில் மாற்றமா? அவசியமல்ல என்கிறார் ட்ரூடோ



கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கனடாவில் லிபரல் கட்சியில் தாம் வகித்து வரும் தலைமை பதவியில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

கட்சி தலைமை பதவியில் மாற்றம் செய்வதன் மூலம் லிபரல் கட்சிக்கு நன்மை ஏற்படும் என்ற வாதத்தை தான் நிராகரிக்கின்றார் எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஜனநாயக கட்சி தலைவர் ஜோ பைடன் ஜனாதிபதி வேட்பாளர் பதவியில் இருந்து விலகியமை தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தலைமை பதவியில் மாற்றம் செய்யத் தேவையில்லை | Trudeau Insists He Still Has What Canadians

மிக நெருக்கடியான தருணத்தில் கனடாவின் பொருளாதாரம் வலுவான நிலையில் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வலுவான பொருளாதரத்தைக் கொண்டு கனடியருக்கு உதவ முடியும் எனவும் தாம் நம்புகிறார் எனவும் எதிர்காலத்தை சிறந்த முறையில் கட்டி எழுப்ப முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாம் கலாச்சார போர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப் போவதில்லை எனவும்ட்ரூடோ தெரிவித்துள்ளார்.



# வாகனக் கொள்ளைச் சம்பவங்கள் யோர்க் பிராந்தியத்தில் அதிகரிப்பு

கனடாவின் யோர்க் பிராந்தியத்தில் வாகனக் கடத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இந்த ஆண்டில் இதுவரையில் கார் கடத்தல் சம்பவங்கள் பாரிய அதிகரிப்பினை பதிவு செய்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஐந்தாண்டு காலப் பகுதியில் யோர்க் பிராந்தியத்தில் வாகனக் கொள்ளைச் சம்பவங்கள் 400 வீதமாக உயர்வடைந்துள்ளது.

இந்த ஆண்டில் யோர்க் பிராந்தியத்தில் 64 வாகனக் கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனவும் இது 2023ம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்படும் போது 106 வீத வளர்ச்சியாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

யோர்க் பிராந்தியத்தில் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களின் எண்ணிக்கையும் வெகுவாக அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் 92 வீதத்தினால் அதிகரித்துள்ளன.